**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

## முன்னுரை:

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறித்து பல குழப்பங்களும் மாறுபாடான கருத்துக்களும் நிலவி வருகின்றன.

கிறிஸ்துவின் ஆட்சி வருமென்கிற வாக்குத்தத்தம் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

1,845 குறிப்புகள் பழைய ஏற்பாட்டில்

318 குறிப்புகள் புதிய ஏற்பாட்டில்

மொத்தம் உள்ள 27 புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் 23 புத்தகங்களில் இதை குறித்து குறிப்புகள் உள்ளன.

216 அதிகாரங்கள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறிப்பிட்டுள்ளன.

இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையை குறித்து உள்ள ஒவ்வொரு தீர்க்கதரிசனத்திற்கும் நிகராக

எட்டு தீர்க்கதரிசனங்கள் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**யோவான் 14:1-3,** 1. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். 2. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். 3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.

இயேசு தம்மை விசுவாசிப்பவர்களை மீண்டும் தன்னிடம் சேர்த்துக்கொள்ள வருவேன் என்று கூறியிருக்கிறார்.

ஆகவே விசுவாசிகளாக நாம், அவருடைய வருகைக்கு காத்திருந்து எப்போது வருவார் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

யாரும் நம்மை ஏமாற்றிவிடாதபடி கவனமாயிருக்க வேண்டும் என்று இயேசு நம்மை எச்சரித்திருக்கிறார்.

**மத்தேயு 24:4**, *இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;*

*இந்த வசனங்களின் ஆரம்பத்தை நீங்கள் பார்க்கும்போது, இயேசு இவற்றை ஒலிவ மலையில் தம்முடைய சீஷர்களோடு பேசினார் என்பது விளங்கும்.*

*இயேசு கிறிஸ்துவின் இந்த உபதேசங்கள் மூன்று சுவிசேஷ புத்தகங்களில் எழுதப்பட்டிருந்தாலும், மத்தேயு இதை வார்த்தை மாறாமல் அப்படியே எழுதியிருக்கிறார். ஏனெனில், மத்தேயு குறிப்பெடுக்கும் (*shorthand*) திறன் உடையவர்.*

- *மத்தேயு* 24& 25
- *மாற்கு* 13
- *லூக்கா* 21

**மத்தேயு 24:1-3**, *1. இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள். 2. இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச்*

*சொல்லுகிறேன் என்றார். 3. பின்பு, அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.*

பலர் வஞ்சிக்கப்படுவார்கள் என்று இயேசு குறிப்பிடுகிறார்.

**மத்தேயு 24:5,** *ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.*

பிதா ஒருவர் தவிர அந்த நேரத்தை ஒருவரும் அறியார்கள்.

**மத்தேயு 24:36,** *அந்த நாளையும் அந்த நாழிகைகளையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.*

**மத்தேயு 24:42,** *உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.*

**மத்தேயு 24:44,** நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.

**லூக்கா 12:37 & 40,** 37. எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

40. அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்.

**மாற்கு 13:32,** அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.

**அப்போஸ்தலர் 1:6-7,** 6. அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.

*7. அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல.*

ஆக, நாம் ஏன் இதை படிக்க வேண்டும்?

நாம் எதிர்பார்க்காத நேரத்தில் அவர் வருவதால், அவருடைய வருகைக்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

வேதத்தின் கால் பங்கு தீர்க்கதரிசனங்களாகும். 735 நிகழ்வுகள் வேதத்தில் தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டுள்ளன

596 நிகழ்வுகள் நிறைவேறிவிட்டன – அதாவது 80% நிறைவேறிவிட்டது

139 நிகழ்வுகள் இன்னும் நிறைவேற வேண்டும் – அதாவது 20% இன்னும் நிறைவேற வேண்டும்

இதில் ஒரு நிகழ்வு மாத்திரம் 318 முறை முன்னறிவிக்கப்பட்டுள்ளது.அது நமது ஆண்டவரின் இரண்டாம் வருகையாகும்.

*ஒலிவ மலையில் இயேசு கிறிஸ்துவிடம் அவருடைய சீஷர்கள் இதை குறித்து கேட்டபோது, அவர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நான்கு அடையாளங்களை கூறுகிறார்.*

1. *உலகம்* - World
2. *சபை* - Church
3. *எருசலேம்* - Jerusalem
4. *வானம்* - Sky

*எனவே நாமும் இவற்றை படித்து, நம்மை சுற்றி நடக்கும் காரியங்களை அறிந்தவர்களாக இருப்போம்.*